# பொள்ளாச்சி நகராட்சி

## 21.11.2019 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட தீர்மானம்

1952) அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்–19.07.2018(ம) அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 27.07.2018ன்படி நகராட்சியில் சொத்துவரியினை 01.04.2018 முதல் சொத்துவரியில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும் குடியிருப்பில்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் சொத்து வரியை உயர்த்த ஆணையிடப்பட்டது.

அதன்பேரில், பொள்ளாச்சி நகராட்சியில் 01.04.2018 முதல் கீழ்க்கண்ட விவரம்

| 01.04.2008ம் ஆண்டில் அடிப்படை மண்டல மதிப்பு | | 01.04.2018ம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட அடிப்படை மண்டல மதிப்பு | |
|---|---|---|---|
| ‘A’ மண்டலம் | ரூ.2.80 | ‘A’ மண்டலம் | ரூ.3.30 |
| ‘B’ மண்டலம் | ரூ.2.30 | ‘B’ மண்டலம் | ரூ.2.70 |
| ‘C’ மண்டலம் | ரூ.1.80 | ‘C’ மண்டலம் | ரூ.2.10 |
| ‘D’ மண்டலம் | ரூ.1.10 | | |

மேற்கண்ட மண்டல மதிப்பு நிர்ணயித்து குடியிருப்பு மற்றும் குடியிருப்பில்லாத கட்டிடங்களுக்கு 18% உயர்வு செய்து சொத்துவரி 01.04.2018ல் சீரமைத்து இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1264 நாள்.28.11.2018ல் தீர்மானிக்கப்பட்டதின்படி 01.04.2018 முதல் அமுலில் உள்ளது.

மேற்காண் நடைமுறையில் உள்ள நிலையில் அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.11.2019ல் மேற்கண்டவாறு உயர்த்தப்பட்ட சொத்துவரி மறுபரிசீலனை செய்ய ஏதுவாக அரசு நிதித்துறை (செலவினங்கள்) முதன்மை செயலாளர் அவர்களின் தலைமையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அடங்கிய 3 உறுப்பினர்கள் கொண்ட குழு தற்போது அமைக்கப்பட்டுள்ளது. சொத்துவரி பொது சீராய்வு (Revision of Prpperty Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வினையும், சொத்துவரி விதிப்பிற்கான மண்டல மதிப்பு (Zonal rates) மற்றும் 01.10.2017 ஆம் தேதி முதல் சொத்துவரி மறு சிரமைப்பு (Remeasurment) செய்து உயர்த்தப்பட்டதனையும், இக்குழு மறு ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வரை நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.6160/2019/அ3**